## ஐந்தாம் நிலை

இயேசு தம் சிலுவையைச் சுமப்பதற்கு
சீரோனான சீமோன் உதவி செய்கின்றார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------

இன்றைய வாழ்வில்

இறைவனின் ஊர்வலத்திலே மனிதனின் பங்கு ,சுமைகளை விரும்பி ஏற்றிடும் தோள்களிலே சுமையும் சுவையாகும் இறைவனின் வழியாகும் என்ற பாடல் வரிகள் ஆம் அன்பார்ந்தவர்களே எங்கெல்லாம் துன்பம் தெரிகின்றதோ அங்கே சீரோனான சீமோனைப் போன்று சிறுபகுதியாவது உதவி செய்யுங்கள் அப்போது இறைவனின் இறுதி ஊர்வலத்திலே பங்குகொண்ட நிறைவு பெறுவீர்கள்

இறைவேண்டல்

சிலுவையினால் ஜெயம் கொண்ட இயேசுவே ! துன்ப துயரப் படுபவர்களுக்கு உதவிடக் கூடிய நல்ல உடல்நலத்தையும் உறுதியான மனத்திடனையும் தந்து உதவிபுரிய வேண்டும் என்று உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி --------------------

4.ஊர்வலம் போகுது - 3 இறுதி ஊர்வலம் போகுது
அன்று இறைவனின் ஊர்வலம் இன்று மனிதனின் ஊர்வலம் -2
அதில் மாண்புகள் மலர்ந்திடும் புது வாழ்வுகள் பிறந்திடும்

சுமையில்லாமல் பயணமில்லை
சுவையில்லாமல் வாழ்வுமில்லை (2)
சுமைகளை விரும்பி ஏற்றிடும் தோள்களில்
சுமையும் சுவையாகும் இறைவனின் வழியாகும்

## ஆறாம் நிலை

இரத்தக்கறை பிடித்த இயேசுவின் திருமுகத்தை ஒரு பெண் துடைக்கின்றாள்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------

இன்றைய வாழ்வில்

கனத்த சிலுவையோடு கனிந்த இதயம் கொண்டவர், கால் தடுமாற, பயணத்தைத் தொடரும்போது பெண் ஒருத்தி கைமாறு கருதாது, கறை படிந்த திருமுகத்தைத் துடைக்கிறாள்,



ஈராயிரமாண்டுகளுக்கு முன் எப்படி வந்தது இந்தத் துணிவு. வெரோணிக்காள், இப்போது வீரமங்கை, பெண்களே , எழுந்திடு,ங்கள் தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாகும், உங்கள் பயணத்தை நிறுத்திவிடும். விமர்சனங்களுக்குப் பயந்து வீட்டுக்குள் பதுங்காமல் சம்பிரதாயத்திற்குப் பயந்து சரித்திரத்திலிருந்து ஒதுங்காமல் வெரோணிக்கள் போன்று துணிந்து செயற்படுங்கள்

இறைவேண்டல்

இறைவா, உம்திருமுகக்கோலத்தைப் பார்த்து, பெண்ணின் கரம் செயலாற்றியது. நாங்கள் பிறர் துன்பத்தில் உதவும் கரங்களாக உருமாறி துணிவுடன் உதவிபுரிய அருள்தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -----------------

2.கர்த்தரே உம் வதனம், இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெராணிக்கம்மாள், வெண் துகிலால் துடைத்தும்
எங்கே போகிறீர்

## ஏழாம் நிலை

.இயேசு சிலுவைப் பாரத்தால் இரண்டாம் முறை தரையில் விழுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------

இன்றைய வாழ்வில்

இயேசு மீண்டும் கீழே விழுகிறார். சிலுவையின் பாரம் அவரை அதிகமாக அழுத்தியது. மரச்சிலுவையின் பாரத்தைவிட, மனச்சிலுவையின் பாரம் அவருக்கு மிகுந்த களைப்பை உண்டாக்கியது. கசையடிகளால் உடலில் களைப்பு, ஆனால் செல்லும் வழியில் கிடைத்த வசைமொழிகளால் மனதில் களைப்பு, நிந்தை அவமானம் என்று, அனைத்து உபாதைகளும், அவர் சிலுவையின் அழுத்தத்தை அதிகரித்தது. இந்த மண்ணுலகை உண்டாக்கிய பரிசுத்தர் மண்ணோடு மண்ணாகப் புரள்கின்றார் போராட்டங்களைச் சந்தித்தவர்கள்தான் சரித்திரத்தில் இருக்கின்றார்கள் என்று நமக்கு கற்பிக்கவல்லவோ இத்தனை துன்பங்கள்

இப்பாடல்களின் ஒலி(mp3) வடிவம் எமது பணியக இணையத்தளமாகிய
**www.tamilcatholicnews.com**
இல் தரவிறக்கம் செய்யலாம்.



# சிலுவைப் பாதை 2016

தொடக்கப்பாடல் (மன்னிப்பு)

1.அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச் சென்றேன்
நான் கெட்டலைந்து ஓடி வந்தேன்
என்னைக் கண்பாரும் உந்தன் பிள்ளை நான் (2)

பாடிவரும் பறவைகளும் காடுகளில் மிருகங்களும்
உன்னன்பில் மகிழ்ந்திருக்க நான்
உன்னைப் பிரிந்து நொந்தேன் (2)

சுமைகளில்சோர்ந்தோரேஎன்னிடத்தில்வாருமென்றீர்
ஆறுதல் வார்த்தை என்னை உன்னிடத்தில்
ஈர்த்ததையா (2)

தொடக்க செபம்

அன்பான தந்தையே உமது திருமகனும் எமது மீட்பருமான யேசுவின் பாடுகளின் மகத்தான பாதையை சிந்திப்பதற்கு முன்பதாக உம்மிடத்தில் மன்னிப்புக் கேட்க வந்திருக்கின்றோம். தங்கம் ஒன்று நன்றாக மிளிர வேண்டும் என்றால் அது சுத்திகரிக்கவோ அல்லது புடமிடப்படவோ வேண்டும் அது போல நாமும் உம் அன்பை உதறிச் சென்று அறிந்தும் அறியாமலும் தவறுகள் செய்திருக்கலாம் ஆனாலும் எம்மைப் பரிசீலனை செய்து இச் சமுதாயத்தில் தங்கம் போல் மிளிர நீர் கொடுத்திருக்கும் இத் தவக்காலத்திற்கு நன்றியப்பா. இந்த நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி உமது திருமகனின் பாடுகளை நல்லமுறையில் தியானித்து அவரிடம் இருந்து நல்ல பல பாடங்களைக் கற்று எமது வாழ்வை மிளிரச் செய்ய எம்மோடு இருந்து எம்மை வழிநடத்தும் ஆமென்.

2.எங்கே சுமந்து போகீறீர்?சிலுவையை நீர் எங்கே சுமந்து போகிறீர்
பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க
எங்கே போகிறீர்

## முதலாம் நிலை

இயேசுவை மரணதிற்கு தீர்வையிடுகின்றார்கள்

முதல்வர்- திவ்விய இயேசுவே உம்மை ஆராதிது வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்

அனைவரும் - அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகை மீட்டிரே

இன்றைய வாழ்வில்

2016 ம் ஆண்டிலே நவீனமயமான தொழில்நுட்பத்திலே சிறுபிராயத்துப் பிள்ளைகள் அறிவுபூர்வமாக சிந்திக்கின்ற வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது இந்நிலையில் பெரியவர்கள் அறிவிலிகள் என்று தீர்ப்பிடப்படுகின்றார்கள்.சேவை செய்யும் மக்கள் குறைவாக உள்ள இக்காலத்தில் அவர்களை தீர்ப்பிடுபவர்களோ அதிகரித்துக்கொண்டு இருக்கின்றார்கள் யார்யாரெல்லாம் அநியாயமாக எங்கெல்லாம் தீர்ப்பிற்கு உள்ளாகின்றீர்களோ அவர்கள் இயேசுவிடம் கற்றுக்கொள்ளுங்கள்! மக்களின் கூக்குரலினால் பிலாத்து என்ற தலைவரால் இயேசுவுக்கு கிடைத்த தீர்ப்பு என்ன !

இறைவேண்டல்

அமைதியின் தெய்வமே ! சிலுவை மரணமே உமக்கு தீர்ப்பாக கிடைத்திருந்த போதும் பொறுமையோடு எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டீரே அதைப் போல நாமும் மற்றவர்களை தீர்ப்பிடாமல் பொறுமை காக்கவும் தீர்ப்புக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில் உம்மைப் போல் பொறுமை காக்கவும் எங்களுக்கு உதவி செய்யும் ஆமென்.

முதல்வர்-எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி

அனவரும்- எங்கள் பேரில் தயவாயிரும்-

முதல்வர்- மரித்த விசுவாசுகளின் ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது

அனைவரும் - ஆமென்

2.மனித பாவத்தாலே, மரணத்தீர்வை பெற்று
தூய செம்மறிபோலே, துக்கத்துடன் வருந்தி
எங்கே போகிறீர்

## இரண்டாம் நிலை

இயேசுவின் தோள்மேல் சிலுவை சுமத்துகின்றார்கள்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------

இன்றைய வாழ்வில்



!சிலுவையின்மையே சிலுவை! என்று கூறியுள்ளார் . புனித மாண்ட்போர்ட் அதாவது துன்பமில்லாமல் இருப்பதே பெருந்துன்பம் என்றார். ஒவ்வொரு இறைமகனும் துன்பத்தை சுமக்கின்ற விதத்தில்தான் துயரம் நிறைந்துள்ளது .இயேசு நமக்காக தம்மீது சுமத்தப்பட்ட சிலுவையை சுகமாக ஏற்றுக்கொண்டார் நாமும் நம்முடைய வாழ்வில் எவ்விதமாக சிலுவையை சுமக்கின்றோம் பிறருக்காக சிலுவையை சுமக்கின்றோமா! சுயநலத்திற்காகப் பிறர்மீது சிலுவையை சுமத்துகின்றோமா!

இறைவேண்டல்

அன்பான இயேசுக் கிறிஸ்துவே உலக மக்களுக்காக சிலுவையை அன்போடு ஏற்றுக் கொண்ட அதே பண்பு எங்கள் வாழ்விலும் பணியிலும் வெளிப்படவும் எங்களுக்கு வரும் துன்பங்கள் எங்கள் திராணிக்கு மேற்படாதபடி இருக்கவும் நாங்கள் அவற்றைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளவும் எங்களை வழிநடத்தும் ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -----------------

2.பாரச்சிலுவை மரம், பாவத்தின் சுமை தாங்கி
பாசத்துடன் அனணத்து, பாரத்துடன் நடந்து
எங்கே போகிறீர்

## மூன்றாம் நிலை

இயேசு சிலுவையின் பாரத்தால் கிழே விழுகின்றார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------

இன்றைய வாழ்வில்

இறைவல்லமை நிறைந்த நம் இயேசுக் கிறிஸ்து தம்மிடம் இருந்த வல்லமையை பயன்படுத்தாமல், நமக்காக நம்மைப் போல் சிலுவை சுமக்கின்றார் ! மகனே மகளே நீங்களும் உங்கள் வாழ்நாழில் துன்பம் எனும் சிலுவையை சுமக்கும் போது வேதனையிலும் சோதனையிலும் தரைமட்டும் வீழ்ந்துவிடக் கூடும் ஆனாலும் நம்மிக்கையோடு எழுந்து நடக்கும் படி கற்பிக்கின்றார். உறுதியோடு பயனிப்போம் வெற்றியைப் பெறுவோம்.

இறைவேண்டல்

சுமைசுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் என்ற இயேசுவே.! சுமைகளிலே வீழ்ந்துவிடாதபடியும் ,வீழ்ந்தாலும் உறுதியோடு எழுந்து நடக்கவும் எங்களுக்கு உமது வல்லமையைத் தாரும் ஆமென்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -------------------



2.கல்வாரி மலை நாடி, தள்ளாடி தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களை, தனிமையாய் சுமந்து
எங்கே போகின்றீர்

## நான்காம் நிலை

இயேசு தம் பரிசுத்த தாயை சந்திக்கின்றார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------

இன்றைய வாழ்வில்

எந்த ஒரு தாயும் தன் மகன் அல்லது மகள் துன்பப்படவேண்டும் வேதனையடைய வேண்டும் என எண்ணுவதில்லை. மாறாக உதவ வேண்டும் வழிகாட்ட வேண்டும் என்றே உண்மையான பாசத்தால் செயல்படுவார்கள். அதேபோல அன்னை மரியாவும் தம் ஒரே மகன் மீது வைத்திருந்த அன்பினால், பாசத்தினால் துன்பநேரத்திலும் இயேசுவை சந்திக்கிறார் ஆறுதல் தருகிறார். இன்றைய காலகட்டதில் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி நல்வழி காட்ட தயங்கும் பெற்றோர்களுக்கும் .பெற்றோர்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள மதித்து நடக்க மறுக்கின்ற பிள்ளைகளுக்கும் சிலுவைப்பாதையின் நான்காம் நிலை பாடமாக அமைகின்றது

இறைவேண்டல் /

பாசமுள்ள இயேசுவே !ஒவ்வொரு பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானத்துடன் நல்வழி காட்டவும் ஒவ்வொரு பிள்ளைகளும் தங்கள் பெற்றோரை மதித்து பாசத்துடன் வாழவும் நீரே பாலமாக இருந்து வழிநடத்தும் ஆமென்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -------------------

3.சந்திப்பு நிகழுதம்மா தாயின்
சந்திப்பு நிகழுதம்மா- 2
கல்வாரி செல்லும் பாதையிலே
கழுமரம் சுமந்த பார்வையிலே

குழந்தையின்துன்பம்கண்டுகலங்காஅன்னையில்லை
ஆறுதல் சொல்வதற்கோ வார்த்தைகள் ஏதுமில்லை
அன்னையின் பார்வையில் நம்பிக்கை தீபம்
இயேசுவின் நெஞ்சினில் வலிமையின் வேதம் -2
வாழ்வினில்துன்பம்கண்டுதுவளாதநெஞ்சமில்லை 2
ஆறுதல் கிடைத்தாலும் உள்ளங்கள் தெளிவதில்லை
அன்னையின் பார்வையில் நம்பிக்கை தீபம்
அவளது சந்திப்பில் வலிமையின் வேதம் - 2

துளைத்தது.எங்கள் நெஞ்சத்தால், நாங்க்ள் செய்த பாவம், உம் இதயத்தை ஈட்டியால் குத்தியது .எங்கள் எண்ணங்களால், நாங்கள் செய்த பாவம், உம் தலையிலே முள்முடியை ஏற்றியது. இவற்றிக்காக எங்களை மன்னியும் இயேசுவே. எங்கள் சரீரத்தின் பாவங்களும், எங்கள் மனத்தின் பாவங்களும், உம்முடைய சிலுவையோடு அறையப்பட வேண்டும் என்று எங்களுக்கு நீர் கற்றுத் தந்திருக்கின்றீர்.

இறைவேண்டல்

எமக்காக சிலுவையில் அறையுண்ட அன்பான இயேசுவே, எங்களை நாங்கள் திருத்தவும், எங்கள் குறைகள் சுட்டிக்காட்டப்படும், எல்லா சந்தர்ப்பங்களிலும், அதை மகிழ்ச்சியோடு நாங்கள் ஏற்று கொள்ளவும் உம்மை சிலுவையிலறையும்,படியான் இன்னும் ஒரு தலத்தை மீண்டும் ஒரு முறை எங்கள் வாழ்க்கையில் நாங்கள் உருவாக்காமல் இருக்கவும் எம்மை வழிநடத்தும் ஆமென் ,.

8.ஆணி கொண்ட உன் காயங்களை
அன்புடன் முத்தி செய்கின்றேன் - 2
வலது கரத்தின் காயமே -2
அழகு நிறைந்த ரத்தினமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்
எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -------------------

## பன்னிரெண்டாம் நிலை

இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------
இன்றைய வாழ்வில்

நண்பகல் தொடங்கி நாடெங்கும் மூன்று மணிக்கு இருள் உண்டாயிற்று அப்பொழுது இயேசு எலோயி ,எலோயி லாமா சபக்தானி ! என்று கத்தினார் இதற்கு `என் கடவுளே ,எங்கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர் `என்பது பொருள் சிலுவையும் ஆணிகளும் இயேசுவைக் கொல்லவில்லை .மாறாக மனிதர்களின் பேச்சு அவரைக் கொண்டது .. யாருக்கும் தீங்கு செய்யாத கோரமான சிலுவை இயேசுவைக் கொலை செய்து தன்னைப் புனிதப் படுத்திக்கொண்டது. உயிர்விடும் தறுவாயிலும் கூட தம்மை துன்புறுத்தியவர்களுக்காக மனம்விட்டு தம் தந்தையிடம் மன்னிப்பு கேட்கிறார். இன்று நம்மில் எத்தனைப் பேர் இப்படி இருக்கிறோம் என்று



சிந்திப்போம். மனிதமே! நண்பனுக்காய் உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு வேறொன்றுமில்லை என்றவர். நட்பின் இலக்கணமாய் நாடித்துடிப்பை முடித்துக்கொண்டார். அவருக்காக நாங்கள் என்ன செய்துள்ளோம்?

இறைவேண்டல்

எமக்காக பிறந்து, எமக்காக வாழ்ந்து, எமக்காக மரித்த இயேசுவே, இந்த உலகம், உடல், அலகை ஆகியவற்றை எதிர்த்து நிற்க ஆற்றல் தாரும். எங்கள் மரணவேளையில் என் மீது இரக்கமாயிரும். பரகதியில் உம்மோடு வாழ வரம் தாரும் எங்களை துன்புறுத்துவோருக்காக செபிக்க உம்மை நோக்கி நாள்தோறும் முழு மனதுடன் மன்றாட எங்க்ளுக்கு வரம் தாரும். ஆமென்.

9.சிலுவை மரமே சிலுவை மரமே
உன்னை நான் முத்தி செய்கிறேன் (2)
இறைவன் இயேசு உன்னைச் சுமக்க
என்ன தவம் செய்தாய் (2)

பாவச்சுமையின்சின்னமாக
உன்னைச்சுமந்தஇயேசுவே -2
புதிய வாழ்வின் புனிதமாக
உன்னை உயர்த்திவிட்டார் - 2

ஆணி கொண்டு உன்னில் அறைந்து
உயிரை மீட்டார் இயேசுவே (2)
மேனி வழிந்த குருதி நனைந்து
புனிதமானாய் சிலுவையே - 2

இறைவன் வார்த்தை இறுதியாக
உந்தன் மேலே ஒலித்தது -2
அன்பும் அருளும் ஆசி பொழிவும்
உந்தனிடமே பிறந்தது - 2
பிறந்த நிகழ்வும் இறந்த விதமும்
அடிமைக் கோலக் காட்சியே - 2
நிகழ்ந்ததனைத்தும் சிகரமாக
உன்னில் முடிந்தது மாட்சியே -2
தலையைச் சாய்த்து உயிரைநீக்க
அன்னை மடியும் இல்லையே 2
கரங்கள் விரித்து உம்மில் மரித்தார்
புனிதமானாய் சிலுவையே (2)



இறைவேண்டல்

அன்பான இயேசுவே நாங்கள் தடம் மாறி தவறி விழும் போதெல்லாம் எம் மனதிற்கு விளக்காய் உமது வார்த்தகளையும் எம் காயங்களுக்கு மருந்தாய் உம் ஆவியையும் அனுப்பி எம்மை தூக்கி நிறுத்தி வழிநடத்தும் ஆமென்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -------------------
2.பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த, பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து
எங்கே போகிறீர்

## எட்டாம் நிலை

இயேசு பெண்களுக்கு ஆறுதல் அளிக்கிறார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------
இன்றைய வாழ்வில்

எதை நாம் தருவோம் இறைவா உம் இதயத்தின் அன்பிற்கீடாக என்று ஆறுதல் சொல்ல, கண்ணீர் புரண்டோட கதறி, ஐயோ ஆண்டவரே நீ வீதிகளில் பேசியதும், எல்லோருக்கும் தர்மம் செய்ததும் அன்று வீணாகப் போனதோ என்று தாய்மார்கள் அழுதார்கள். எனினும் எனக்காக அழாதீர்கள் உங்களுக்காக அழுங்கள், ஒன்றாய் வாழக்கற்றக்கொள்ளுங்கள் , உங்களையே காத்துக்கொள்ளுங்கள் . என்று இயேசு ஆறுதல் கூறுகின்றார் அவரது அன்பு எத்தகையது என்று கற்றுக்கொள்ளுவோம்

இறைவேண்டல்

இறைவா, எங்களது பேச்சால், சுயநலச் செயல்களால் பிறரை அழவைக்கின்றோம். எங்களின் அநீத செயல்களை அகத்தில் ஆய்வு செய்து, எங்கள் தவறுக்காய் அழவும், அழுது புலம்புவோருக்கு ஆறுதலாய் இருக்கவும் வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -------------------

5.எதை நான் தருவேன் இறைவா - உன்
இதயத்தின் அன்பிற்கீடாக

குறைநான் செய்தேன் இறைவா - பாவக்
குழியில் விழுந்தேன் இறைவா (2)
கறையாம் பாவத்தை நீக்கிடவே - 2
நீ கல்வாரி மலையில் இறந்தாயோ

பாவம் என்றொரு விசத்தால் - நான்
பாதகம் செய்தேன் இறைவா (2)
தேவனே உம் திருப்பாடுகளால் - 2
எனைத்தேற்றிடவே நீ இறந்தாயோ

## ஒன்பதாம் நிலை

இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்
திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------
இன்றைய வாழ்வில்
இயேசு சுமந்து வந்த சிலுவையின் பாரம், எவ்வளவு கொடியது என்றால், அவரை கொல்கத்தாவரை சுமந்து செல்ல அது அனுமதிக்கவில்லை. பிலாத்துவின் அரண்மனையிலிருந்து புறப்பட்ட போது, இயேசுவுக்கு இருந்த மனபலம், சரீர உறுதி இப்போது இல்லை. சிலுவையின் பாரமும், போகப் போக அதிகரித்தது. வழி எங்கும், மக்கள் கூட்டம் கூடி நின்று, அவரை எள்ளி நகையாடி பரிகசித்தது. இயேசுவைப் பற்றி ஏற்கனவே திருப்தி இல்லாத யூதர்கள், இப்போது நடப்பதை எண்ணி, தங்கள் ஐயப்பாடுகள் சரி என்று உறுதிப்படுத்தினர். இயேசுவை விரோதிகள் தண்டித்தது, "பொறாமை யால்தான் என்று பிலாத்து உணர்ந்திருந்தான். அந்தப் பொறாமைக் கூட்டம், கொக்கரித்துக் கூத்தாடியது. இயேசுவின் கரத்தினின்று அற்புதங்களையும், ஆறுதலையும் பெற்றுக் கொண்ட, எளிய மக்களும் இயேசுவைக் கண்ட போது, அவரை பரிகசித்தது, அவரின் துயரத்தை, பன்மடங்காக் கி அவரை மீண்டும் தரையிலே வீழ்த்தியது.. நாமும் நம் வாழ்நாழில் அறிந்தும் அறியாமலும் மற்றவர்களை பரிகசித்து கவலையுறச் செய்தோமா ? அன்பார்ந்தவர்களே அப்படி அடுத்தவரை துன்புறுத்திய போதெல்லாம் நீங்கள் இயேசுவையே விழச்செய்தீர்கள் என்று நினைவு கொள்ளுங்கள்
இறைவேண்டல்
அன்பு இயேசுவே அகந்தையில் விழுந்து எமக்கு அடுத்துள்ளவர்களை யும் எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை யும் துயரத்திற்கு உள்ளாக்காமல் இருக்கவும் நீர் எமக்காக சிந்திய இரத்தத்தால் பாவக்குழியிலிருந்து எழுந்து உமது அன்பின் அரவணைப்பில் நாங்கள் வாழவும் நீர் உதவிட



வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம் ..ஆமென்
எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -------------------

6.சுமைசுமந்து சோர்ந்திருப்போரே
என்னிடம் எல்லோரும் வாருங்கள்

உங்களை நான் இளைப்பாற்றுவேன்
உங்களை நான் காப்பாற்றுவேன்
உங்களை நான் தேற்றிடுவேன் உங்களை நான் ஏற்றிடுவேன்

உங்களை நான் நடத்திச் செல்வேன்
உங்களை நான் அன்பு செய்வேன்
உங்களை நான் அரவணைப்பேன்
உங்களை நான் வாழச் செய்வேன்

## பத்தாம் நிலை

இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது
திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------
இன்றைய வாழ்வில்
விழுந்தும் எழுந்தும் தவழ்ந்தும் இயேசு கல்வாரி கல்வாரி மலையை அடைந்துவிட்டார் .முடிந்ததா வேதனை ! கசையடியால் உண்டான காயங்களோடு ஒட்டிக் காய்ந்திருந்த இயேசுவின் ஆடைகளை உரித்து இழுக்கின்றனர். ஐயோ !கசையடி பட்டபோது உண்டான வேதனையை விட இப்பொழுது இயேசுவின் உடலின் சதைகள் கிழிந்து இரத்தம் பெருக்கெடுத்து ஒடுகிறதே! அன்பு, அமைதி, கருணை, இரக்கம், இன்பம் என்னும் ஆடைகளை இவ்வுலகிற்கு தந்த நம் அன்பர் இயேசு இன்று ஆடையின்றி அவமானச் சின்னமாய் கூனிக் குறுகி நிற்கின்றார் இது யாருக்காக?
என் சகோதரனே! சகோதரியே! எங்கள் உடல் தூய ஆவியின் ஆலயம் என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தும் மற்றவர்களுக்கு சஞ்சலதை உண்டுபண்ணக் கூடிய விதமாக நாங்கள் இருந்திருக்கின்றோமா ? அல்லது அன்பு,அமைதி,கருணை,இரக்கம் ,இன்பம் என்னும் இயேசுவின் ஆடைகளை அணிந்து மற்றவர்களுக்கு உதவியிருக்கின்றோமா !



இறைவேண்டல்
எங்களுக்காய் ஆடையிழந்து அவமானச் சின்னமாய் உருகுலைந்த என் நல்ல இயேசுவே என் உடல் நீர்; வாழும் இல்லம் என்பதை உணர்ந்து தகாத எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் இடம் கொடாத நல்ல மனத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென்
எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி -------------------

7. செந்நீர் வேர்வை சொரிந்தவரே
என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய் -

புண்படக் கசையால் துடித்தவரே
என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய் -

முள்முடி சூடிய மன்னவரே
என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய் -

துன்பச் சிலுவை சுமந்தவரே
என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய் -

தன்னுயிர் தியாகம் புரிந்தவரே
என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய் -

## பதினோராம் நிலை

இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்
திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து-------------
இன்றைய வாழ்வில்
உள்ளங்கைகளை மரத்திலே பதித்து வைத்து, பச்சை மரத்தில், ஆணி அடிப்பது போல் ஓங்கி அறைந்தார்கள். இரண்டு கால்களையும் பிணைத்து வைத்து, பாதங்களைத் துளைத்து ஆணி அடித்தார்கள். ஆணிகளின் முனையை வளைக்க, இயேசுவின் உடலோடு சிலுவையை கவிழ்த்து வைத்து அடித்தார்கள். ஆக, இந்த கொடுமையான சம்பவம், இயேசுவை கொல்லாமல் கொன்றது. உடலிலிருந்து உயிர் பிரியும், பொல்லாத நேரத்தை நோக்கி, இந்தப் பாடுகள் நடந்தன .இயேசுவே, எங்கள் கரத்தால் நாங்கள் செய்த பாவம், உம்முடைய கரத்தில் ஆணிகளை துளைத்தது. எங்கள் கால்களால் நாங்கள் செய்த பாவம், உம்முடைய கால்களில் ஆணிகளை